விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 171 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 25 வியாழக்கிழமை (08.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# கஜேந்திரகுமார்
# கைதாகி விடுதலை

(கொழும்பு)
பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுக் காலை கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
(11ஆம் பக்கம் பார்க்க)


கஜேந்திரகுமார் கொழும்பில் கைது செய்யப்பட்டபோது...

### கஜேந்திரகுமார் மீது தாக்குதல்
## ம.உ.ஆணைக்குழுவில் பொலிஸார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தாக்கியமை தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர 11

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு இல்லை
### கஜேந்திரகுமார் கைது தொடர்பில் சபாநாயகர்

(கொழும்பு)
பொலிஸாரின் கடமைகளுக்கு யாருமே இடையூறு விளைவிக்க முடியாது என கஜேந்திரகுமார் எம்.பியின் கைது தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
பாராளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி 11

## கறுப்புத் துணி கட்டி
### கிளிநொச்சியில் கவனயீர்ப்பு


11

## பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது
### கஜேந்திரகுமாரின் கைது தொடர்பில் சஜித்

(கொழும்பு)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கைது 11



## கஜேந்திரகுமார் கைது தொடர்பில் பாராளுமன்றில் காரசார விவாதம்
### கைதைக் கண்டித்து எதிர்க்கட்சி போர்க்கொடி

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தொடர்பாக பாராளுமன்றில் நேற்று காரசார வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கஜேந்திரகுமாரின் கைதுக்கு கண்டனம் வெளியிட்டனர்.
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றில் சிறப்புரிமை தொடர்பில் தனிப்பட்ட பிரேரணையொன்றை இன்று (நேற்று) சமர்ப்பிக்க விருந்த நிலையில் 11

## வடக்குக்கு தனியான சட்டம் இல்லை
### கஜேந்திரகுமார் விவகாரம் தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)
வடக்குக்கு தனியான சட்டம் ஒன்றும் இல்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றில் 04

## வீதி விபத்து; இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
இவ்வாறு உயிரிழந்தவர் விளக்கு 04

## கிணற்றில் விழுந்த மாணவி உயிரிழப்பு
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)
தோட்டக்கிணற்றில் விழுந்த பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.
இதில் க.பொ.த உயர்தரத் 11



### யாழ். - சென்னை விமான சேவை
## இரு நாட்டு உறவை மேலும் வலுப்படுத்தும்
### யாழ்.இந்தியத் துணைத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)
யாழ்சென்னைவிமானசேவை 100 நாட்களை நிறைவு செய்யும் நிலையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மக்கள் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என யாழ்.இந்திய துணை தூதர் ராகேஷ்நடராஜ்ஜெயாஸ்கர் தெரிவித்தார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# NEW SCIENCE WORLD
## கணித விஞ்ஞானப் பிரிவுகள்
## A/L 2025 Batch
### Tamil And English Medium

**Zoom** இன் ஊடான இணையவழி வகுப்புக்கள் மற்றும் நேரடி வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பௌதீகவியல் | : | திரு.R.குமரன்<br>திரு.R.குகன் |
| இரசாயனவியல் | : | திரு. டயஸ்<br>திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | : | திரு.N.T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | : | திரு.S.S.செந்தில்ராஜ்<br>திரு.G.V.ஹரிகரன் |
| ICT | : | திரு.T.லவேந்திரன் |

அனுமதிகளை 09.06.2023 அன்று காலை 5.20 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்பம் : 14.06.2023 (புதன்கிழமை)

நேரம் 8.00Am


மேலதிக விபரங்களுக்கு 077 336 4055, 021 221 6690, 077 336 4030, 075 8364055

**NEW SCIENCE WORLD**
Navalar Road, Brown Road Junction, Jaffna.

(C-6691)



# Building வாடகைக்கு



Whatsapp, Viber

**0041797305333**
**0041797816967**

இல.111, பலாலி வீதி,
தபால் பெட்டி சந்தி,
திருநெல்வேலி.

(15837)


# மரண அறிவித்தல்



## தம்பையா தர்மலிங்கம்
### (லக்ஷ்மி நாராயணா லொறி உரிமையாளர்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தர்மலிங்கம் (07.06.2023) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற அப்புத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வசந்தமாலா அவர்களின் அன்புக் கணவரும் கௌரி, லிங்கேஸ்வரன், விக்கினேஸ்வரன், கமலேஸ்வரி, கமலேஸ்வரன், குமார், நளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன், தனுசா, சாந்தினி, புஸ்பாகரன், செங்கீரன் ஆகியோரின் மாமனாரும் மயூறி, குகன், சதிஸ், தர்மினி, திவாகர், தனுஸ், திரிசா, தாமிரன், பவித்திரா, பவிதா, பவிதரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (09.06.2023) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் மூத்தமகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

077 687 2885 - கௌரி(மகள்)
077 787 2944 - குமார்(மகன்)

(15889)


தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கணக்கு கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோத்தராக கடமையாற்றும் திருமதி **சகிதா பாஸ்கரன்** அவர்களுடைய பாசமிகு தந்தையார்

**அமரர் சின்னத்தம்பி கந்தையா**

அவர்கள் 06.06.2023 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 01.11.1948 மறைவு 06.06.2023

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-6688)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 25 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

**076 911 9371**
**076 436 5814**

(15888)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்திய மின் விநியோக கட்டமைப்பை ஒன்றிணைக்க தீர்மானம்

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கை - இந்திய மின் விநியோக கட்டமைப்பை ஒன்றிணைப்பதற்கு முன்னுரிமையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான தொழில்நுட்ப அறிவு மற்றும் வணிகக் கட்டமைப்பை தயாரிப்பதற்கு உலக வங்கியினால் இலங்கை மின்சார சபைக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடர்பில் உலக வங்கியின் பிராந்திய வலையமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் பெசில் ப்ருமன் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் சியோ கென்டா ஆகியோர் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (நி)

# டுபாயில் இருந்து வந்த தாய், குழந்தைக்கு குரங்கம்மை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**(கொழும்பு)**

**வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த தாய் மற்றும் குழந்தைக்கு குரங்கு அம்மை பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

(கொழும்பு)

டுபாயில் இருந்து வருகை தந்த இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது குரங்கு அம்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்கள் தற்போது தேசிய தொற்று நோய்கள் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதியாக 2022 நவம்பர் இல் டுபாயிலிருந்து வந்த இலங்கையர்களுக்கு குரங்கு அம்மை இருப்பது கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நிதி தெரிவுக்குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்ற நிதி தெரிவுக்குழுவின் தலைவராக கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நிதி தெரிவுக்குழு உறுப்பினர்கள் இந்த யோசனைக்கு ஏக மன தாக ஆதரவு வழங்கியுள்ளனர். (நி)

# நாமலுக்கான பயணத்தடை நீக்கம்

(கொழும்பு)

காலி முகத்திடல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ,சி.பி. ரத்நாயக்க, சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் சம்பத் அத்துக்கோரள ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை முழுமையாக நீக்குமாறு கோட்டை நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

# முப்படையினருக்கான கொடுப்பனவுகளை தொடர்ந்தும் வழங்கத் தீர்மானம்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெற்ற முப்படையினர் மற்றும் உயிரிழந்தவர்களுக்கான கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே இந்த கொடுப்பனவு இடை நிறுத்தப்படும் என எவரும் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கைக்கான தனது ஆதரவை மீண்டும் வலியுறுத்தியது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆசிய திறைசேரி திணைக்களத்தின் பிரதி உதவி செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது, இலங்கைக்கான அமெரிக்காவின் நீண்டகால ஆதரவை அவர்கள் மீண்டும் வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு நிலையான மற்றும் வளமான நாடு என்ற பகிரப்பட்ட பார்வையை அடைய இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பையும் தூதுக்குழு வலியுறுத்தியுள்ளது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## வடக்கு- கிழக்கில்

# விகாரைகள் அமைப்பதை நிறுத்துவது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எட்டப்படவில்லை

## தொல்லியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் புதிதாக பௌத்த விகாரைகளை அமைப்பதை நிறுத்துவது தொடர்பாக இறுதி முடிவொன்று எடுக்கப்படவில்லை என்று தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும் புதிய பௌத்த விகாரைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அண்மையில் உத்தர வொன்றை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுரமனதுங்க, இந்த விடயம் தொடர்பாக இதுவரை இறுதி முடிவொன்று எட்டப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்த விடயம் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகவும் எனினும் இது குறித்து இணக்கப்பாட்டிற்கு தாங்கள் வரவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்தோடு, ஜனாதிபதியின் உத்தரவை நிராகரிக்கவும் இல்லை என்று தெரிவித்த அவர், இது குறித்து தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாக சுட்டிக்காட்டினார். (நி)

# உள்ளூராட்சித் தேர்தலை இனியும் ஒத்திவைக்க முடியாது- சம்பிக்க

(கொழும்பு)

நிதி இல்லை என்ற பொய்யான அறிவிப்பை கூறி இனிமேலும் உள்ளூராட்சித் தேர்தலை இனியும் ஒத்திவைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



அண்மைக்காலத்தில் அரச நிகழ்வுகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவீனங்கள், நிதி ஒரு பிரச்சினையாக இல்லை என்பதையே காட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# அரசியல் கைக்கூலிகளை நியமித்து உள்ளூராட்சி மன்றங்களை கட்டுப்படுத்த கூடாது

## சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சுற்றறிக்கைகள் மூலம் அரசியல் கைக்கூலிகளை நியமித்து உள்ளூராட்சி மன்றங்களை தமக்கு விருப்பியவாறு கட்டுப்படுத்த முயற்சித்து வருவதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்த சுற்றறிக்கையின் மூலம்,உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க, ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் புதிய சபைகளை ஏற்படுத்தாமல் அரசியல் அடியாட்கள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களை கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டினார்.

அத்துடன், நீதி நியாயமான நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டிய நிலையில், விருந்துபசார நிகழ்ச்சிகளை நடத்துவது தார்மீகமல்ல என்றும் சுதந்திரமாக தீர்ப்புகளுக்கு இது இடையூறாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில் ஜனாதிபதி தேர்தலை என்றாலும் நடத்துமாறும், இதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (நி)



# இலங்கையில் கரை ஒதுங்கிய எட்டு நாடுகளின் பிளாஸ்டிக் கழிவுகள்

(கொழும்பு)

சீனா, பங்களாதேஷ், இந்தியா, துருக்கி, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் சீஷெல்ஸ் ஆகிய எட்டு வெவ்வேறு நாடுகளில் இருந்து கடலில் கொட்டப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கையில் கரை ஒதுங்கியுள்ளன.

இரு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பவளப்பாறை சூழலியல் தொடர்பான சீனா - இலங்கை கூட்டுக் கருத்தரங்கில் விஞ்ஞானி ஒருவர் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கரையோரத்தில் இருந்து 32 மில்லியன் கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக ருஹுனு பல்கலைக்கழகத்தின் கலாநிதி டெர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
2. இவ்விலை மனுக்கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடை முறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப் படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2023.06.08ம் திகதி தொடக்கம் 2023.06.21ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூ ராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப் பாய் எனும் முகவரிக்கு 2023.06.22 அன்று பி.ப 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூல மாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்வி தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கே உரியது.

| இல | கேள்வி எண் | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(16)/2/P/SP/2022 | சிவப்பு பச்சை அரிசி | 1932 Kg | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15நாட்கள் |
| 02 | | உழுந்து | 966 Kg | |
| 03 | | கடலை | 644 Kg | |
| 04 | | பயறு | 161 Kg | |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்
2023.06.08

(C-6693)


## வீதி விபத்து...

வைத்தகுளம், ஓமந்தையைச் சேர்ந்த சிவானந்தம் அனுஜன் (வயது- 29)' என்பவராவார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் சென்று கொண்டிருந்த போது மாலை 6:45 மணியளவில் ஓமந்தை சந்தியில் துவிச்சக்கர வண்டி ஒன்றின் பின்புறமாக மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

துவிச்சக்கர வண்டியில் சென்றவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத நிலையில் மோட்டார்சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் கீழே விழுந்து மயக்கம் அடைந்த நிலையில் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் 27ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று புதன்கிழமை(07) அதிகாலை 2.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-60)

# கிளிநொச்சியில் சடலம் மீட்பு

கிளிநொச்சி செல்வாநகர் புதுக்குளம் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி செல்வாநகர் பகுதியை சேர்ந்த 53 வயதுடைய வெள்ளைக்கண்ணு குணசேகரம் எனும் 6 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-100)

## வடக்குக்கு...

நேற்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்தன.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் மகிந்த அமரவீர இந்த நாட்டில் சட்டம் ஒன்றுதான் காணப்படுகின்றது.

வடக்குக்கு ஒரு சட்டம் தெற்குக்கு ஒரு சட்டம் என்ற வேறுபாடு கிடையாது கஜேந்திரகுமார் பொலிஸாரிடம் நடந்து கொண்ட விதம் தொடர்பில் காணொளிகள் உண்டு அவர் சண்டித்தனம் காண்பித்தார். அச்சுறுத்தினார். பொலிஸாரின் கடமைகளைச் செய்யவிடாது தடுத்துள்ளார். அவரை கைது செய்ததில் என்ன தவறு இருகின்றது என்றார். (ம)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15888)


**076 733 6047**
**076 755 8606**


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2847

Search for people, places and things

**ராகவி**

ஏண்டா உங்க அப்பா எந்நேரமும் உன்னைத் திட்டிக்கிட்டே இருக்காரு...



சிங்கத்தை கொஞ்ச முடியாதல்ல, அதுதான்...

**சிந்துஜன்**

பேஸ்புக்ல அறிவுரை சொன்னா லைக், கமெண்ட் பறக்குது...




அடேய் இத எப்படா சேர்த்தாங்க மன நோய் லிஸ்ட்ல!!

**சுபானா**


எல்லாருமே கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கனும்...



ஏன்னா சந்தோஷம் மட்டுமே வாழ்க்கை இல்லை...

**புவிநிலா**

வாழ்க்கையில விழுந்து எழுந்திருக்கிறத விட...



காலைல ஆறு மணிக்கு தூக்கத்தில இருந்து எந்திரிக்கிறது தான் ரொம்ப கஷ்டமா இருக்கு...

**சிவர்சன்**


வாப்பா... தம்பி... நேரமாச்சி...



இருங்க டாக்டர் ரொம்ப நாளாச்சு ஒரு ஸ்டேட்டஸ் போட்டுட்டு வந்துடுறன்...

**ராகவன்**

ஆசிரியர்:- ஒரு தட்டுல பத்து லட்டு இருக்கு அதில ஐந்து லட்டு உன் தம்பிய எடுக்க சொல்றன். தட்டுல மீதி எவ்வளவு லட்டு இருக்கும்?
மாணவன்:- ஒன்னுமே இருக்காது...




ஆசிரியர் :- மக்கு, உனக்கு கணக்கே தெரியல...
மாணவன்:- உங்களுக்கத்தான் என் தம்பிய பற்றி தெரியல...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி கட்டுப்பாடுகள் வார இறுதிக்குள் நீ க்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

சில பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் வார இறுதிக்குள் நீக்கப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி 300 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதிப்படுத்தியுள்ளார். (நி)

# கடவுச் சீட்டிற்கான இணையவழி

## விண்ணப்பங்களை 15 முதல் சமர்ப்பிக்கலாம்

### குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை எதிர்வரும் வியாழக்கிழமை (ஜூன் 15) முதல் சமர்ப்பிக்க முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அறிவித்துள்ளார்.


இலங்கையில் பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியின் ஒரு பகுதியாகவே இணையவழி கடவுச்சீட்டு விண்ணப்ப முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய செயல்முறையானது கடவுச் சீட்டு விண்ணப்ப செயல்முறையை நெறிப்படுத்துவதையும் மூன்று நாட்களுக்குள் விண்ணப்ப்தாரர்களின் குடியிருப்புகளுக்கு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதையும் உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

·கடவுச்சீட்டுகளை வினைத்திறனாக வழங்குவதற்கு வசதியாக, நாடளாவிய ரீதியில் உள்ள 50 பிராந்திய செயலகங்கள் தேவையான வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன.

முறைப்படி, விண்ணப்பதாரர்கள் தங்களின் தொடர்புடைய விண்ணப்பங்களை அருகிலுள்ள பிராந்திய செயலகத்தில் சமர்ப்பித்து, தேவையான நடைமுறைகளை முடித்தவுடன், பாஸ் போர்ட் கூரியர் சேவை மூலம் அவர்களின் குடியிருப்புக்கு அனுப்பப்படும்.

www.immigration.gov.lk என்ற இணையதளத்திற்குச் சென்று, "பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கவும்" விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து, வழங்கப்பட்ட தகவலைச் சரிபார்த்து, விண்ணப்பதாரர்கள் தேவையான விண்ணப்பப் படிவத்தைப் பெறுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# இராசிபலன்

08.06.2023
வைகாசி 25, வியாழக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.57 மணிவரை

திருவோணம் முன்னிரவு 10.56மணிவரை
சுபநேரம் -7.22-8.52 மணிவரை
இராகுகாலம்-1.22-2.52 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவாதிரை, புனர்பூசம்

வளவன்

**மேஷம்**

எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**

மனக்குழப்பங்கள் அகன்று மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும், முன்னோர் சொத்துக்களில் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**

பேச்சில் நிதானம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்**

உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கலகலப்பான கனவுகள் நனவாகலம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்**

வழிபாட்டின் மூலம் வளர்ச்சி காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பழைய கடன்களை அடைக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**

சுற்றத்தவர் வரவால் சுகம் கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்**

நீண்ட நாட்களாக நினைத்த பொருள் ஒன்றை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்**

பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்.

**தனுசு**

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மகரம்**

வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டவீர்கள், நடைபெறாது என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம்.

**கும்பம்**

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும் நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மீனம்**

அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

தேவையானதை எல்லாம் வாங்காதே தவிர்க்க முடியாததை வாங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலகங்களில்

# கடவுச்சீட்டுக்கான விரல் அடையாள பதிவு 15 இன் பின்னரே சாத்தியம்

(சாவகச்சேரி)

பிரதேச செயலகம் ஊடாக கடவுச்சீட்டிற்கான கை விரல் அடையாளம் பதிவு செய்யும் முறைமை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னரே நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உள்ள துறைசார் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடவுச் சீட்டுகளுக்கான கை . விரல் அடையாளங்களை பதிவு செய்வதற்கு யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் குறித்த செயற்பாடு இதுவரை நடைமுறைக்கு வரவில்லை.எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது நடைமுறைக்கு வரும் பட்சத்தில் கடவுச்சீட்டிற்கு இணையவழி ஊடாக விண்ணப்பிப்பவர்கள் திணைக்களம் ஊடாக தகவல் கிடைத்த பின்னர் பரிந்துரைக்கப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு சென்று தமது கைவிரல் அடையாளங்களை பதிவு செய்ய முடியும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-30)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சங்கானைப் பிரதேசசெயலக பிரிவிற்குற்பட்ட நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இறுதிக் கண் பரிசோதனைமுகாம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தொல்புரம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திலும் காலை 11.00 மணிக்கு வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

மற்றும் தென்மராட்சிப் பகுதிக்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இறுதிக்கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே இதுவரை பதிவு செய்யத் தவறிய கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# யோகக்கலை கற்கை நெறியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல். உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறும் இவ் வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள். பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-33)




உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் எற்பாட்டில் "சுற்றுச் சூழலினை பாதுகாப்போம் இயற்கையினை மாற்றியமைப்போம்" என்னும் கருப்பொருளில் சுற்றுச்சூழல் மரக்கன்றுகளை நடும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மத்திய கலாச்சார நிலையத்தின் வளாகத்தில் இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

## யாழ். சென்னை இடையே

# 100 ஆவது தடவையாக சேவையில் ஈடுபட்ட அலையன்ஸ் எயார் விமானம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் இந்தியா இடையே சேவையில் ஈடுபடும் அலையன்ஸ் எயார் விமானம் சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நூறாவது தடவையாக சேவையில் ஈடுபட்டது. இதன் மூலம் 10.500 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயனடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையேயான அலையன்ஸ் எயார் மூலம் இயக்கப்படும்100 ஆவது விமானச்சேவை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தொற்றுநோய் இடர்காலத்தில் இடைநிறுத்தத்திற்குப் பிறகு விமான சேவை கடந்த டிசெம்பர் 2022 அன்று மீண்டும் தொடங்கியது.

இந்தியத் தூதரகத்தின் அறிக்கையில் இச்செயற்பாடானது இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான மக்கள் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என கூறியுள்ளதோடு அதிகரித்த இணைப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பது மட்டுமன்றி சுற்றுலாப் பயணிகளின் வருகையைத் தூண்டி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் என்று தெரிவித்துள்ளது.

மேலும் வாரத்தில் 4 தடவை இடம்பெற்றுவரும் சேவையை 7 தடவையாக அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (4-33)

# தென்மராட்சி பிரதேச வீட்டுத்திட்ட பயனாளிகளின் தெரிவுப்பட்டியல் காட்சிப்படுத்தல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வீட்டுத்திட்ட தேவைப்பாடுடைய பயனாளிகளின் தெரிவுப் பட்டியல் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக தென்மராட்சி பிரதேசத்திற்கு ஒரு மில்லியன் பெறுமதியான வீடுகள் 40 மற்றும் 0.6மில்லியன் பெறுமதியான வீடுகள் 16 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் 56 பயனாளிகளைக் கொண்ட தெரிவுப் பட்டியல் பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (4-30)

## தெணியானின் சிரார்த்த தினமும் உருவச்சிலை திறப்பும்

(யாழ்ப்பாணம்)

சாகித்ய ரத்னா தெணியானின் முதலாம் ஆண்டுமு சிரார்த்த தினமும் உருவச்சிலை திறப்பும் "ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் தெணியான்" எனும் நூல் வெளியீடும் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொற்றாவத்தை கலையருவியில் யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 250 | 260 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 250 |
| கோவா | 350 | 450 | 450 | 400 |
| கரட் | 400 | 350 | 420 | 450 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 240 | 120 | 200 | 300 |
| வாழைக்காய் | 140 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 400 | 500 | 600 |
| வெண்டக்காய் | 180 | 120 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 240 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 350 | 250 | 300 |
| லீக்ஸ் | 380 | 360 | 420 | 450 |
| பீற்றூட் | 400 | 420 | 300 | 500 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 800 | 1400 |
| போஞ்சி | 500 | 480 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 300 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 70-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 600 | 800 |
| முள்ளங்கி | 180 | 120 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 140 | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | 100 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடை பவனி



(யாழ்ப்பாணம்)

தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேசம் உட்பட பல்வேறு பகுதிகளில் "பிளாஸ்டிக் பாவனையைக் குறைப்போம்" என்னும் தலைப்பின் கீழ் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நடைபவனி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது வீதியோரங்களில் உள்ள கடைகளிற்கும் பொது மக்களுக்கும் பிளாஸ்டிக் பாவனையை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. (4-33)

## புங்குடுதீவு மேற்கு பிட்டியம்பதி

# ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு, 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள் மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (4)

## வண்ணை நாவலர் ம.வி

# சமய குரவர் நால்வர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் சமயகுரவர் நால்வர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.25 முதல் 8.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (4)

# அளவெட்டி தெற்கு முத்துமாரியம்பாள் பஞ்சதள ராஜ கோபுர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய பஞ்சதள ராஜ கோபுர மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 11.53 - 12.10 வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (4-6)



மந்திகை கண்ணகியம்மன் ஆலய வைகாசி விசாக பொங்கல் உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அடியவர்கள் காவடி,கரகம் எடுத்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (படம்-மகாலிங்கம்)

# நகை திருட்டு

வயலில் கட்டப்பட்டு இருந்த மாட்டை அவிழ்க்க சென்ற வயோதிபப் பெண்ணின் கழுத்தில் சுருக்கிட்டு அவரது தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. துன்னாலை பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வயலில் கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்க்க சென்ற பெண்ணை பின் தொடர்ந்து சென்ற திருடன் வயலுக்கு அருகில் வயோதிபப் பெண்ணின் கழுத்தில் சுருக்கு கயிறை மாட்டி இழுத்துள்ளார். அதனால் வயோதிபப் பெண் மயக்க முற்றவுடன் அவரது நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளான்.

மயக்கம் தெளிந்து வயோதிபப் பெண் எழுந்த போதே தனது நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. அதனை அடுத்து அது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (4-33-60)


## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தரம் பிரித்தல் நிலையம் நீர்வேலியில் தரம்பிரிக்கப்பட்ட இரும்பு, செப்பு, பித்தளை, கண்ணாடிப்போத்தல்கள், பிளாஸ்ரிக்பொருட்கள், சேதனப்பசளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

**காலம் - 14.06.2023 புதன்கிழமை காலை 09.00 மணி**
**இடம் - தரம்பிரித்தல் நிலையம் நீர்வேலி.**

**நிபந்தனைகள்**

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 5000.00 மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத் தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை தரம்பிரிக்கும் நிலையத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**

**தொடர்பு இலக்கம், 021 205 3807**

(சி-6685)



## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்
## பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தில் கீழ் குறிப்பிட்டிருக்கும் பதவிகள் வெற்றிடமாக இருப்பதால் இவற்றை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) பதவி - கிளை முகாமையாளர் - (கள் விற்பனை நிலையம்)
சம்பளக்குறியீட்டு இல :- 208/14
சம்பள அளவுத்திட்டம் 17900-155*10-165*10-21100
(02/2022 சுற்று நிருபத்தின்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்துடன் தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்துடன் தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

02) பதவி :- உற்பத்தி முகாமையாளர் - (கள் உற்பத்தி நிலையம்)
சம்பளக்குறியீட்டு இல - 107/12
சம்பள அளவுத்திட்டம் 18820-170*10-185*10-22370 (02/2022 சுற்று நிருபத்தின்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல் / பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை/ மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

03) பதவி :- சாரதி - 01
சம்பளக்குறியீட்டு இல :- 312/14
சம்பள அளவுத்திட்டம் - 17900-155*10-165* 10-21100
(02/2022 சுற்று நிருபத்தின்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

04) பதவி :- கணனி பக்க உருவாக்குனர்
சம்பளக்குறியீட்டு இல :- 322/15
சம்பள அளவுத்திட்டம் - 17435-145*10-160* 10-20485
(02/2022 சுற்று நிருபத்தின்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணனிப்பக்க உருவாக்குனர் பதவியில் 02 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் /தமிழ் மொழி கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தியுடன் அரச/ அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர **MS OFFICE** / அதனை யொத்த கணனிபாட நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

இ. அரச அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேரக் கணனிப் பாட நெறிக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

05) பதவி :- விற்பனை உதவியாளர்
சம்பளக்குறியீட்டு இல :- 308/15
சம்பள அளவுத்திட்டம் - 9700-80*10-85* 10-11350
(02/2022 சுற்று நிருபத்தின்படி)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் / எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது. சிங்களம் /தமிழ் மொழி.கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான் சித்தி.

வயதெல்லை 18-45 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்
விண்ணப்பங்களை பூரணப்படுத்தி 21.06.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

குறிப்பு :- விண்ணப்பப்படிவத்தினை சங்க தலைமைக்காரியாலயத்தில் ரூபா 100/= பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள தலைவர்**

(6862)

**சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, சங்கானை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 199





பழுவேட்டரையர் தாம் போகுமிடமெல்லாம் இளையராணியை 'அழைத்துக் கொண்டு போகிறார் என்று நாம் எல்லாரும் எண்ணிக் கொண்டிருந்தோமே, அது பெரிய தவறு.."

"பழுவேட்டரையர் பின் யாரை மூடுபல்லக்கில் வைத்து அழைத்துப் போகிறார்? அந்தக் கிழவரின் பெண் சபலத்துக்கு அளவேயில்லையா?"

"மூடு பல்லக்கில் இருந்தது ஸ்திரீ அல்ல, தாயே!"

"ஸ்திரீ இல்லை என்றால்? எந்த ஆண்மகன் அப்படி மூடுபல்லக்கில் மறைந்து கொண்டு வருவான்?"

"மன்னிக்க வேண்டும் அம்மா! மூடுபல்லக்கில் மறைந்து வந்தது தங்களுடைய திருக்குமாரர் மதுராந்தகத் தேவர்தான்!"

செம்பியன் மாதேவி சிறிது நேரம் திகைத்து நின்றுவிட்டார்.

"கடவுளே! நான் செய்த குற்றத்துக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?" என்று தமது வாய்க்குள்ளே சொல்லிக் கொண்டார்.

பிறகு ஆழ்வார்க்கடியான் சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரியில் நடந்த சதிக் கூட்டத்தைப் பற்றிச் சொன்னான். அதைக் கேட்டு அம்மாதரசி அடைந்த மனத் துயரைச் சொல்லி முடியாது.

"ஐயோ! என் மகனே! உன்னைச் சிவஞானச் செல்வனாக வளர்க்க முயன்றேனே? அதன் பயனா இது? சோழர் பெருங்குலத்துக்கு உன்னால் இத்தகைய அபகீர்த்தியா நேர வேண்டும்? சோழப் பேரரசுக்கு இத்தகைய பெருந் தீங்கு உன்னாலேயா ஏற்பட வேண்டும்?" என்று புலம்பினார்.

பின்னர், "திருமலை! மறுபடியும் என்னைப் பார்த்துவிட்டுப் போ! அதற்குள் குந்தவையிடம் பேசி இந்தப் பெரும் விபத்தை எப்படித் தடுக்கலாம் என்று யோசித்துச் சொல்லுகிறேன்!" என்றார்.

"தாயே! இளவரசியிடம் கூடத் தாங்கள் இதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது."

"ஏன்? அவளைப் பற்றிக் கூட ஐயப்படுகிறாயா என்ன?"

"அது இயற்கைதானே அம்மா? ஆதித்த கரிகாலரின் அருமைச் சகோதரிதானே அவர்?"

"அதனால் என்ன? திருமலை! சூரியன் மேற்கில் உதயமாகிக் கிழக்கே அஸ்தமித்தது என்று நீ சொன்னாலும் நம்புவேன். சிவபெருமானைக் காட்டிலும் திருமால் பெரிய தெய்வம் என்று நீ சாதிப்பதை நம்பினாலும் நம்புவேன். ஆனால் குந்தவையின் பேரில் குற்றம் சொன்னால் நம்ப மாட்டேன். அவள் பிறந்த அன்றைக்கு அரண்மனை மருத்துவச்சி எடுத்து வந்து குழந்தையை என் இரு கரங்களிலும் கொடுத்தாள். அன்று முதல் நானே அவளை வளர்த்து வந்தேன். என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் அருமையாக வளர்த்து வந்தேன். அவளும் என்னையே பெற்ற தாயாகவும், தகப்பனாகவும் எண்ணி இன்று வரை அன்பும் மரியாதையும் செலுத்தி வருகிறாள்."

"அம்மா! ஒன்று கேட்கிறேன். குந்தவை தேவி குடந்தை சோதிடரிடம் சென்று வந்ததைப் பற்றித் தங்களிடம் சொன்னாரா?"

"இல்லை அதனால் என்ன?"

"ஜோசியர் வீட்டில் வாணர் குலத்து வாலிபன் ஒருவனைப் பார்த்தது பற்றியும் மறுபடி அவனை அரிசிலாற்றங்கரையில் சந்தித்தது பற்றியும் சொன்னாரா?"

"இல்லை இதெல்லாம் என்ன கேள்வி? இப்படிக் கேட்பதில் உன் கருத்து என்ன?"

"தங்களிடம் சொல்லக் கூடாத இரகசியம் ஒன்று இளவரசி வைத்திருக்கிறார் என்பதுதான். நான் குறிப்பிட்ட அந்த வாலிபன்தான் ஆதித்த கரிகாலரின் தூதன் ஒற்றன் என்று சொன்னாலும் தவறாகாது."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூங்கில் காட்டில் தீ



கொன்றைக் காட்டில் குரங்குகள் ஏராளமாக இருந்தன. "க்ராக்.. க்ராக்.." என்று குரங்குகளின் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. இதனால் மற்ற விலங்குகளுக்கு நிம்மதி இல்லாமல் போனது.

"குரங்குகளே, நிம்மதியாக உணவு கூடச் சாப்பிட முடியவில்லை" என்று பிளிறியது யானை. யானையின் பிளிறலைக் கேட்டவுடன் குரங்குகள் அமைதியாயின. ஆனால், அந்த அமைதி கொஞ்ச நேரம் கூட நீடிக்கவில்லை.

'குரங்குகளை என்ன செய்வது?' என்று யானைகள் கவலைப்பட்டன. கரடிகள், மான்கள், சிறுத்தைகள் எனப் பலவும் குரங்குகளை எச்சரித்தன. கொஞ்ச நேரம் அமைதியாக இருக்கும் குரங்குகள், பிறகு அட்டகாசம் செய்ய ஆரம்பித்துவிடும்.

விலங்குகள் சிங்கராஜாவைச் சந்தித்தன. "நண்பர்களே, நீங்கள் உங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதில் தவறில்லை. ஆனால், மற்றவர்களின் உணர்வுகளை மதிக்காமல் இருப்பது தவறு. சிங்கராஜாவிடம் புகார் அளிக்கச் சென்றிருக்கிறார்கள்" என்றது ஒரு வயதான குரங்கு.

"அதெல்லாம் சரிதான். நாம் மரத்துக்கு மேலே இருந்துதானே சத்தம் போட்டு விளையாடுகிறோம் இது தவறா?" என்று துடுக்குத்தனமாகக் கேட்டது ஒரு குட்டிக் குரங்கு. "ஆமாம். நம் சத்தம் அதிகமாக இருந்தால் அதை எச்சரிக்கை செய்ய வேண்டியது பறவைகள்தான். ஆனால், அவை எதுவும் சொல்வதில்லையே?" என்றது மற்றொரு குரங்கு. "நாம் நம் பக்கத்து நியாயத்தை மட்டுமே சொல்லிக் கொண்டிருப்பதில் எந்த நன்மையும் இல்லை. அவர்களின் நியாயத்தையும் கேட்க வேண்டும். அதுதானே சரியான முறை" என்றது வயதான குரங்கு. அப்போது தண்டோரா சத்தம் கேட்டது.

"இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், எல்லா விலங்குகளும் குரங்குகள் மீது புகார் கொடுத்துள்ளன. எல்லோரும் குகை மேட்டுக்கு மாலையில் வந்து சேரணும். இது அரசரின் உத்தரவு..."

"நான் பயந்தபடியே ஆகிவிட்டது. தண்டோரா போடும் அளவுக்கு நாம் அட்டகாசம் செய்திருக்கிறோம்" என்று வருந்தியது வயதான குரங்கு.

"தாத்தா, நீங்க எதுக்கும் கவலைப் படாமல் இருங்க. சிங்கராஜாவிடம் நாங்க பேசிக்கிறோம்" என்றது ஒரு வாலிபக் குரங்கு. "நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இனி உங்க விருப்பம்" என்றது வயதான குரங்கு. அனைத்து விலங்குகளும் மாலை நேரம் சிங்கராஜாவின் குகை மேட்டுக்கு வந்தன. மிகப் பெரிய கர்ஜனையுடன் மலைக் குன்றின் மீது கம்பீரமாக வந்து அமர்ந்தது சிங்கராஜா.

"என் அழைப்பை ஏற்று இங்கு வந்ததற்கு நன்றி. இன்றைய சிக்கலுக்கு வருவோம். குரங்குகளே, உங்கள் மகிழ்ச்சிகாக மற்றவர்களின் உணர்வுர்களைப் புரிந்து கொள்ளாமல், மதிக்காமல் இருப்பது தவறுதானே?" என்றது சிங்கராஜா.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். ~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பார்ந்த உறவுகளுக்கு ஓர் ஆன்மா எழுதும் அன்பு மடல்

*இறந்துபோன ஓர் ஆன்மா தன் உறவுகளுக்கு எழுதுகின்ற கடிதம் இது.*

அன்புக்குரிய உறவுகளே! பாசத்தோடும் அன்போடும் உங்களோடு உறவாடிய யான் இன்று உயிரோடு இல்லை.

யான் மரணித்தபோது நீங்கள் பட்ட துன்பம் கண்டு கடும் வேதனைப்பட்டேன். நீங்கள் கூக்குரல் இட்டு அழுதபோது, நானும் அழுதேன்.

என் செய்வது என் அழுகை உங்கள் செவிகளை எட்டாத காரணத்தால், என் அழுகையை உங்களால் உணரமுடியவில்லை.

இருந்தும் இறுதிக்கிரியைகளின்போது அழாதீர்கள். நீங்கள் அழுதால் இறந்தவரின் ஆத்மா அமைதிகொள்ளாதென உங்களைத் தடுத்தவர்களைப் பார்த்தேன். அதற்குள் இருக்கின்ற உண்மைத்தன்மையை தேகாந்த நிலையில் உணர்ந்து கொண்டேன்.

என் அன்புக்குரிய உறவுகளே! ஆன்மா அழிவற்றதெனும் உண்மையை அறிந்து கொள்ளுங்கள். என்றும் நான் உங்களுடனேயே இருப்பேன்.

என்னை நினைந்து நீங்கள் அழும் போதெல்லாம் நானும் அமைதி குலைந்து அழுகின்றேன்.

நீங்கள் செய்கின்ற பிதிர்க்கடன்கள் வீண் போகாது. இறந்த உங்கள் உறவுகளுக்காகத் தொடர்ந்தும் பிதிர்க்கடன்களைச் செய்யுங்கள்.

பிதிர்க்கடன்களைச் செய்யாத தோசம் தீராத துன்பத்தையும் இழப்புகளையும் தரும் என்று சாத்திர நூல்கள் கூறுவது முற்றிலும் உண்மை என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இப்போது நான் உங்களுக்கு இக்கடிதம் எழுதுவதன் முதன்மை நோக்கம் என் இறுதி ஊர்வலத்தின்போது நீங்கள் வீதிகள், சந்திகளில் கொளுத்துகின்ற வெடி தொடர்பானதாகும்.

ஆம், வீட்டில் இருந்து என் உடலைத் தூக்கும்போது நீங்கள் கதறி அழும் குரல் கேட்டு நான் அமைதிகுலைந்து நிற்கிறேன்.

நான் மரணித்து விட்டேன் என்று நினைக்கும்போதெல்லாம் உங்களின் பிரிவு என்னை வாட்டுகிறது.

எங்கே? மீண்டும் என் உடலில் சென்று என் வீட்டுக்குப் போக முடியாதா என்று அந்தரிக்கின்றேன்.

இந்த நேரத்தில் சந்திகளில் நீங்கள் கொளுத்துகின்ற வெடிச்சத்தத்தால் நான் அதிர்ந்து போயுள்ளேன்.

எதற்காக வெடி கொளுத்துகிறீர்கள். என் பிரிவை உங்களால் தாங்கமுடியவில்லை எனில் வெடி கொளுத்துவதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

வெடி கொளுத்தாதீர்கள்... வெடி கொளுத்தாதீர்கள்... என்று கத்துகிறேன்.

எனினும் என் குரல் உங்களிடம் வந்து சேரவில்லை.

அந்தோ! சந்தி முழுவதும் வெடிகளின் துகள்கள், கடதாசித் தூள்கள். வெடிச்சத்தத்தால் பயம் கொள்ளும் பயணிகள்.

ஆம், இது இறுதி ஊர்வலம் இறைவழி பாட்டுடன் அமைதியாக நடக்கட்டும். இனிமேல் இறுதி ஊர்வலத்தின்போது வெடி கொளுத்துவதை முற்றாகத் தவிருங்கள். இது இறந்த ஆன்மாக்கள் சார்பாக விடும் தாழ்மையான கோரிக்கை.

# சர்வதேச விசாரணை பொறிமுறையே தமிழர்களுக்கு தீர்வை பெற்றுத்தரும்

## விடுதலையின் பின் கஜேந்திரகுமார் எம்.பி

(கிளிநொச்சி)

சர்வதேச விசாரணை பொறிமுறை மூலம் தான் தமிழர்களுக்கான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்பது எனது கைது எடுத்துக்காட்டுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் கைதாகி பிணையில் விடுதலையாகி வந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், எங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தரப்பு பொலிஸ் என்பதால் அந்த தரப்பையும் விசாரிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாரிடம் இருக்கின்றது பொலிஸார் விசாரணைகளை பக்க சார்பாக முன்னெடுத்து எங்கள் மீது ஒரு அடக்குமுறையை பிரயோகிக்கின்ற வகையிலேயே கைது சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது

இந்த சம்பவத்தை நாங்கள் மிகத் தெளிவாக நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயரதிகாரிகள் மட்டத்திலே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் நீதிமன்றில் தெரிவித்ததாக குறிப்பிட்டார். (ம-315)

## அல்வாய் மாவிலங்கடியில் சடலம் ஒன்று மீட்பு

அல்வாய் வடமத்தி, அல்வாய் மாவிலங்கடி வீதியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று புதன்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வேதார்வளவு, வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுராமலிங்கம் (வயது-81) என்பவராவார்.

மேற்படி வயோதிபர் மாவிலங்கடி வீதியில் அதிகாலை 12.30 மணியளவில் விழுந்து கிடந்ததை கண்ட இளைஞர் ஒருவர் அவரை எழுப்ப முற்பட்ட சமயம் அவர் அசைவற்று காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். (ம-60)

## பருத்தித்துறையில் வீடு உடைத்து நகை திருட்டு

### இரு மணிநேரத்தில் திருடன் பொலிஸாரால் கைது

பட்டப்பகலில்வீடு உடைத்து ஐந்தரைப் பவுண் தங்கச் சங்கிலியை திருடிய நபர் ஒருவர் இரண்டு மணித்தியாலத்திற்குள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட தங்க நகையும் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெரு பகுதியை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்று தேவை நிமித்தம் காலையில் வெளியில் சென்றதை சாதகமாக பயன்படுத்தி பட்ட பகல் நேரம் வீடு உடைக்கப் பட்டு அங்கிருந்த பொருட்களை அனைத்தும் சல்லடை போடப்பட்டு 5 1/2 பவுண் நிறையுடைய இரட்டைப்பட்டு தங்கச் சங்கிலி திருடிச் செல்லப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் நண்பகல் 12.00 மணியளவில் பருத்திதுறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இரண்டு மணித்தியாலத்துக்குள் மூன்றாம் குறுக்கு தெரு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து திருடப்பட்ட தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## உடுப்பிட்டி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

இமையாணன்மேற்கு, உடுப்பிட்டி பகுதியில் வீடு ஒன்றில் இருந்து நேற்று புதன்கிழமை காலை குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மேற்படி பகுதியைச் சேர்ந்த ஜெயசேகரசிங்கம் திலேந்திரன் (வயது -36) என்பவராவார்.

திருமணமாகி சில வருடங்களேயான அவர் தூங்கிய நிலையில் காணப்படுவதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்துத்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். (ம-60)

## நெடுந்தீவில் படகு விபத்து 38 பேரை உயிருடன் மீட்ட கடற் படை

நெடுந்தீவு இறங்கு துறைக்கு அருகில் கடலில் விபத்துக்குள்ளான இழுவை படகில் இருந்து 38 பேரை கடற்படையினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

புங்குடுதீவு, குறிகட்டுவான் இறங்குதுறையிலிருந்து 38 பேருடன் கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் சென்ற குறித்த இழுவை படகு நெடுந்தீவின் இறங்குதுறைக்கு அருகில் கடலில் ஏற்பட்ட அலையின் காரணமாக படகின் அடிப்பகுதி தரைப் பகுதியில் மோதியுள்ளது.

இதனால் படகின் அடிப்பகுதியில் துளை உண்டாக, உள்ளே தண்ணீர் கசிவு ஏற்பட்டு அது ஆபத்தில் உள்ளதாக வடக்கு கடற்படை கட்டளை பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பிற்கு உடனடியாக பதிலளித்த கடற்படையினர், கடலோர ரோந்து படகுகள் மற்றும் இலங்கை கடற்படையின் இரு சிறிய படகுகளை பயன்படுத்தி விபத்தில் சிக்கிய படகையும் அதில் இருந்த பயணிகளையும் பத்திரமாக மீட்டனர். (ம-33)

## கொடிகாமத்தில் விபத்து இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் வீதியை கடக்க முற்பட்ட இளைஞனை மோட்டார்சைக்கிள் மோதியதில் குறித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வரணி-சிட்டிவேரம் ஆலயத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி வந்த தூக்குக் காவடியின் பின்பாக நடந்து வந்த இளைஞன் வீதியை கடக்க முற்பட்ட போது பின்பக்கமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் இளைஞன் படுகாயமடைந்துள்ளார். (ம-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை மன்னார் பிரதேசத்தில்** மன்னார் நகரம்- இலங்கை மின்சார சபையடி, ஒல்லிமோட்டை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# சாவகச்சேரி பிரதேச சபை
## சபை நிதி வேலைத்திட்டங்கள் - 2023

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும்போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2023.06.08 தொடக்கம் 2023.06.30 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 14:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங் களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பெறுகை குழு, சாவகச் சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2023.06.08 ஆம் திகதியிலிருந்து 2023.06.28 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக் கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2023.06.30 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி யானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்வி தாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதி யிலிருந்து அனைத்து வேலைகளுக்கு 63 நாட்கள் (2023.08.31) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2023.06.15 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ உள்ளூராட்சி பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C .F/2023/03,04,05 | கிராமசபை 18 ஆவது வீதி நாகநாதன் இணைப்பு வீதி மீள் நிர்மாணம் (நாகநாதன் வீதி 15 ஆவது வீதி ) - கொடிகாமம் தெற்கு<br>கிராமசபை 18 ஆவது வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம் மத்தி<br>கிராமசபை 20 ஆவது வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம் மத்தி | 4.11 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 41,150.00 | 2023.09.28 |
| 2 | NP/14/41/(6)/2/C .F/2023/06,07,08, 09 | குன்றுப்பள்ள 1 ஆம் குறுக்கு வீதி நிர்மாணம் - கைதடி நுணாவில்<br>வாகையடி 3 ஆவது குறுக்கு வீதி (கண்டல்காடு வாகையடி இணைப்பு வீதி ) நிர்மாணம் - மட்டுவில் தெற்கு<br>மலர்மகள் வீதி நிர்மாணம் - மட்டுவில் நுணாவில்<br>குன்றுப்பள்ள 2 ஆம் குறுக்கு வீதி நிர்மாணம் - கைதடி நுணாவில் | 3.72 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 31,000.00 | 2023.09.28 |
| 3 | NP/14/41/(6)/2/C .F/2023/10,11,12, 13 | ஆத்தியடி வீதி மீள்நிர்மாணம் - கொடிகாமம் மத்தி<br>கொடிகாமம் தெற்கு ஊரெல்லைவீதி மீள்நிர்மாணம்<br>செல்லையா 16வது வீதி மீள்நிர்மாணம் - கொடிகார்<br>தாளையடி அம்மன் கோவில் வீதி இணைப்பு வீதி - 1 மீள்நிர்மாணம் - அல்லாரை | 3.63 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 36,500.00 | 2023.09.28 |
| 4 | NP/14/41/(6)/2/C .F/2022/14,15,16. | கச்சாய் வெள்ளாம்போக்கட்டி ஊரெல்லைவீதி மீள்நிர்மாணம்<br>கார்த்திகை பிள்ளையார்கோவில் வீதி புனரமைப்பு - பாலாவி<br>பாதாள வைரவர் கோவில் வீதி மீள்நிர்மாணம் - கச்சாய் | 4.04 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 40,500.00 | 2023.09.28 |
| 5 | NP/14/41/(6)/2/C .F/2023/17,18,19, 20,21 | பாம் வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு.<br>பாம் வீதி 2ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு.<br>மந்துவில் கிழக்கு மீசாலை வடக்கு ஊரெல்லை வீதி - மந்துவில் வரணி<br>கொடுக்குமாலை மயான வீதி மீள் நிர்மாணம் - வரணி இயற்றாலை -<br>நாகதம்பிரான் வீதி மீள் நிர்மாணம் - வரணி இயற்றாலை | 4.11 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 41,500.00 | 2023.09.28 |
| 6 | NP/14/41/(6)/2/C .F/2023/22,23,24, 25,26 | உசன் தேவாலய வீதி நிர்மாணம் - கட்டம் II<br>பனிக்கையடி வீதி நிர்மாணம் - மிருசுவில்<br>A9 பனிக்கையடி இணைப்பு வீதி நிர்மாணம் - மிருசுவில்<br>மிருசுவில் GTMS வீதி நிர்மாணம் - மிருசுவில் வடக்கு<br>பத்திரகாளிஅம்மன் கோவில் வீதி நிர்மாணம் - மிருசுவில் | 3.93 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 39,500.00 | 2023.09.28 |
| 7 | NP/14/41/(6)/2/C .F/2023/27,28,29, | அப்பக்கொட்டில் 3 ஆவது குறுக்கு வீதி மீள் நிர்மாணம் - இராமாவில்<br>அப்பக்கொட்டில் 2 ஆவது குறுக்கு வீதி (சீமாவளவு வீதி ) மீள் நிர்மாணம் - இராமாவில்<br>சியாமளா மில் வீதி மீள் நிர்மாணம் மீசாலை வடக்கு | 3.29 | 90 | C9/C8 or C7 (வீதி நிர்மாணம்) | 33,000.00 | 2023.09.28 |
| 8 | NP/14/41/(6)/2/C .F/2023/30,331,3 2,33 | தம்பு கடை வீதி மீள்நிர்மாணம் - சரசாலை வடக்கு<br>சரசாலை மத்தி சனசமூகநிலைய வீதி மீள் நிர்மாணம்<br>ஊரெல்லைத்தெரு இராமாவில் வீதி (உண்ணிவயல் குள வீதி) - இராமாவில்<br>கரன் வீதியில் Box Culvert நிர்மாணம் - தாவளை இயற்றாலை கட்டம் II | 2.73 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 27,500.00 | 2023.09.28 |
| 9 | NP/14/41/(6)/2/C .F/2023/34,35,36, 37 | புலம் வீதி & சீக்காவத்தை வீதி மீள் நிர்மாணம் - கைதடி மேற்கு<br>கொரிறங்கூடை இணைப்பு வீதி மீள் நிர்மாணம் - கைதடி கிழக்கு<br>வேலம்பிராய் குள வீதி மீள் நிர்மாணம் - நாவற்குழி<br>கைதடி நாவற்குழி 1 வது குறுக்கு வீதி மீள் நிர்மாணம் | 3.77 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 38,000.00 | 2023.09.28 |
| 10 | NP/14/41(6)/2/C. F/2023/38,39,40, 41 | பாதணிப்புல குள வீதி 2 ஆம் ஒழுங்கை - வரணி இயற்றாலை<br>தீணிக்கிராய் வீதி மீள் நிர்மாணம் இடைக்குறிச்சி வரணி<br>துவரங்கரை வீதி மீள் நிர்மாணம் இடைக்குறிச்சி வரணி<br>இறைக்கேணி வீதி மீள் நிர்மாணம் நாவற்காடு வரணி | 4.15 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 42,000.00 | 2023.09.28 |
| 11 | NP/14/41(6)/2/C. F/2023/42,43,44 | இறத்திக்குள 1வது குறுக்கு வீதி மீள் நிர்மாணம் - வரணி இயற்றாலை<br>சூரியகுமாரன் சனசமூகநிலைய 1வது குறுக்கு வீதிமீள் நிர்மாணம் மந்துவில் வரணி<br>வரணி பாடசாலை இறத்திக்குள இணைப்பு வீதி புனரமைப்பு (பள்ளம்பெருமாள் குள வீதி) - வரணி இயற்றாலை | 4.24 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 42,500.00 | 2023.09.28 |
| 12 | NP/14/41(6)/2/C. F/2023/45,46,47 | கண்ணகை அம்மன் வீதி / காளிகோவில் 5 வது வீதி மீள் நிர்மாணம்<br>நாகநாதன் வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம்<br>நவிண்டான் 1வது வீதி மீள் நிர்மாணம் - கொடிகாமம் | 2.38 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 24,000.00 | 2023.09.28 |
| 13 | NP/14/41(6)/2/C. F/2023/48,49,50 | கடற்கரை வீர பத்திரர் கோவில் வீதி மீள் நிர்மாணம் - கெற்பேலி<br>பால்நிலா சனசமூக நிலைய வீதி மீள் நிர்மாணம் - கச்சாய்<br>கெற்பேலி பாலாவி ஊரெல்லை வீதி மீள் நிர்மாணம் - கெற்பேலி | 3.16 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 32,000.00 | 2023.09.28 |
| 14 | NP/14/41(6)/2/C. F/2023/51,52 | 300 வீட்டுத் திட்டம் வீதி மீள்நிர்மாணம் - நாவற்குழி<br>கைதடி நாவற்குழி மாதர் சங்க வீதி மீள் நிர்மாணம் | 2.95 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 30,000.00 | 2023.09.28 |
| 15 | NP/14/41(6)/2/C. F/2023/53,54 | பூமரக் கிணற்றடி வீதி மீள்நிர்மாணம் - மறவன்புலோ<br>5 வீட்டுத் திட்டம் வீதி மீள்நிர்மாணம் - நாவற்குழி | 3.03 | 90 | C9,C8 or C7 (வீதி நிர்மாணம்) | 30,500.00 | 2023.09.28 |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை

2023.06.08 (6690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம.உ.ஆணைக்...

குமார் பொன்னம்பலத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

குறித்த பொலிஸாரிடம் நான்கு மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், மேலும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரீட்சைக் கடமையில் ஈடுபட்டிருப்பதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மதியம் இரண்டு மணிக்கு அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-33,104)

## பொலிஸாரின்...

கைது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றைய (நேற்று) பாராளுமன்ற அமர்வில கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதாகவும் கிளிநொச்சி நீதிமன்றில் அவர் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும்பாராளுமன்ற அமர்வுகளுக்காக அவரை அழைத்து வருவதாக பிரதி பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமை மீறப்படக்கூடாது என சபாநாயகர் என்ற ரீதியில் பொலிஸாரிடம் இதனை தெரிவித்துள்ளதாகவும் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதேநேரம் பொலிஸாரின் கடமைகளுக்கும் இடையூறு விளைவிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது என்றும் குறிப்பிட்டார். (ம)

## கறுப்புத் துணி...

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று வாயில் கறுப்பு துணி கட்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரை பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த சமயமே அவரது கட்சி ஆதரவாளர்கள் செயற்பாட்டாளர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## கிணற்றில்...

தில் கல்வி பயிலும் பாவலன் பானுசா (வயது - 18) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

## பாராளுமன்ற...

செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்று பாராளுமன்றிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் சிறப்புரிமை இந்தச் சம்பவத்தின் ஊடாக மீறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "அவருக்கு பாராளுமன்ற சிறப்புரிமையின் பிரகாரம், பாராளுமன்றுக்கு வருகை தர முழு உரிமையுள்ளது.

இவ்வாறான நிலையில், அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த சம்பவத்தின் பின்னணி தொடர்பாக நான் இங்கு கதைக்கப் போவதில்லை.

எனினும், அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், பாராளுமன்றுக்கு வருகைத் தந்து இங்கு உரையாற்ற அவருக்கு பூரண உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம)

## இரு நாட்டு...

நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையிலான இந்தியன் ஏர்லைன்ஸ் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 நாட்கள் நிறைவடையும் நிகழ்வை கொண்டாடிய நிலையில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த விமான சேவையானது இரு நாட்டு இணைப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பது மட்டுமன்றி சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் உதவியது.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் பொருளாதார மீட்சியை சரி செய்வதற்கும் இரு நாட்டு விமான சேவை வாய்ப்பாக இருக்கும் எனத் தெரிவித்தார். (ம-104)

## கஜேந்திரகுமார் கைதாகி...

மருதங்கேணி பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றின்போது பொலிஸ் புலனாய்வாளர்களுடன் இடம்பெற்ற சம்பவம் குறித்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியிலிருந்து வருகை தந்த விசேட பொலிஸ் குழுவினரால் கொள்ளுப்பிட்டியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் வைத்தே அவர் செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்கு வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றுக்கு அழைத்து செல்லப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 5 லட்சம் பெறுமதியான ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்போது, நீண்ட நேரம் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றது. இதன் போது பொலிஸ் விசாரணை அறிக்கை அடுத்த தவணைக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நீதவானால் குறிப்பிடப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

மேலும் வெளிநாட்டு பிரயாண தடை மீளப்பெறப்பட்டதாகவும் அவர் ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

அடுத்தவழக்கு தவணை செப்ரெம்பர் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ம-33,100,104)

## கஜேந்...

அவரை பாராளுமன்றத்துக்கு வர அனுமதிக்காமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தனது பாராளுமன்ற உரையில் அதிருப்தி வெளியிட்டார்.

அத்துடன், இன்று கஜேந்திரகுமாருக்கு நடைபெற்ற இந்த சம்பவம் நாளை ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, ஒழுங்கு பிரச்சினையை எழுப்பிய அமைச்சர் மகிந்த அமரவீர, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்தது தவறு என்றும், பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவிக்க முடியாது என்றும், சண்டித்தனம் காட்டுவதை அனுமதிக்க முடியாது என்றார்.

இதனையடுத்து, அதற்குப் பதிலளிக்க சாணக்கியன் முயற்சிக்கையில் சபையில் கூச்சல் குழப்ப நிலையொன்று ஏற்பட்டது. இதன்போது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சண்டித்தனம் காட்டவில்லை என்றும் பொலிஸாரே மோசமான முறையில் நடந்துகொண்டதாக சாணக்கியன் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, பலரும் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி ஒலிவாங்கியை தருமாறு கூச்சலிட்ட நிலையில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கஜேந்திரகுமார் சண்டித்தனம் காட்டவில்லை என்றும், அவரிடம் மோசமான முறையில் நடந்துகொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்றார். (ம)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 07/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1593
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 0 7 8 5 5 7
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.06.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1168
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 33 44 51 65

### கொவிசெத

திகதி 2023.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 3380
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 15 16 50 77
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 07/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1486
வெற்றி எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 13
வெற்றி இலக்கங்கள்: 44 49 66 72

### ஹந்தஹன HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 447
வெற்றி இலக்கம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 20 24 34 40
ராசி: மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/06/07
சீட்டிழுப்பு இலக்கம் 5138
ஆங்கில எழுத்து: F
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 3 0 8 8 7
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2112
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.07
தினம் புதன்கிழமை
F 04 47 48 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,446,120/-
DLB

### சனிதா

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.07
வெற்றி வாரம்: 4273
வர்ணம்: ஊதா
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 49,243,023.30
வெற்றி இலக்கங்கள்: 06 14 43 55
ஆங்கில எழுத்து: C
DLB

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 6,545,933.20
வெற்றி இலக்கங்கள்: 03 05 25 37
திகதி 2023-06-07
வெற்றி வாரம் 3824
வர்ணம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,691,880/-
DLB

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 35 06 25 32 47
சீட்டிழுப்பு வாரம் 1288
திகதி 2023.06.07
புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 335,893,651.80
DLB

### ஜயோதா Jayoda

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.07
வெற்றி வாரம்: 1928
வர்ணம்: மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,732,888.80
வெற்றி இலக்கங்கள்: 07 32 38 52
ஆங்கில எழுத்து: L
DLB

### அட கோடிபதி ADA KOTIPATHI

புதன்கிழமை
வெற்றி வாரம்: 1938
வர்ணம்: ரோஸ்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.07
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,399,322.40/-
வெற்றி இலக்கங்கள்: 12 33 37 38
ஆங்கில எழுத்து: I
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15856)

076 825 7716 (ஆகாஸ்)

# கஜேந்திரகுமார் எம்.பி கைது
## கலாநிதி ஆறு.திருமுருகன் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்த கண்டன அறிக்கையில்.

எமது நர்ட்டில் மக்களால் தெரிவு செயயப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கே இத்தகைய இடையூறு ஏற்படுமானால் எங்கே சமாதானம் உருவாகப்போகிறது. ஜனாதிபதி அவர்கள் இவ் விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை அவகௌரவப்படுத்தியுள்ளமை கவலைதரும் செய்தியாகும். இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடக்கக்கூடாது. வடக்கில் தமிழர்களின் பிரதிநிதிகளில் ஒருவராக விளங்கும் கௌரவ உறுப்பினரை தொடர்ந்து அவமரியாதை செய்வது தமிழர்களை அவமரியாதை செய்வதற்கு சமமானது. எனவே இத்தகைய சம்பவம் தொடர்பாக மிகுந்த கண்டனத்தையும் எமது கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2025
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் :
11.06.2023 காலை 8.00மணி (ஞாயிறு)
அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
நிர்வாகம் : 077 011 9434
(C-6687)

உடனடி வேலைவாய்ப்பு
சமையல் உதவியாளர்கள்
வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.
• முன் அனுபவம் விரும்பத்தக்கது.
• ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம்: 50,000
(C-6684)
CIMS 49A, CHAPEL STREET, JAFFNA
777-068-777

வேலைவாய்ப்பு
இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் பருத்தித்துறை அச்சுவேலி, நெல்லியடி கிளைகளில் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
A/L மூன்று பாடங்களில் சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
முடிவுத் திகதி : 15.06.2023
(15863)
077 803 9320
075 269 0188

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உள்ளவர்களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.
(C-6684)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

TECHNO WORLD
தொழில்நுட்ப கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L புதிய கல்வியாண்டு 2025
தொழில்நுட்ப பிரிவு
■ திகதி 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
■ நேரம் : காலை 8.30
(C-6692)
(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு)
077 017 5346

உடனடி விற்பனைக்குண்டு
1. சுப்பர் மார்க்கட்டில் பாவனைக்குரிய 3 DOOR RE FRIDGE RATER (சோடாக்கள் பாவனைக்குரிய)
2. காசாளர் மேசை PRINTING BILL MACHINE சேர்ந்தது.
3. பெண்களினதும் சிறுவர்களினதும் ஆடைகள் விசேட தள்ளுபடி 40%
4. வீட்டுப் பாவனைக்குரிய Plastic பொருட்கள் 20% விலைக்கழிவு
உடன் தொடர்பு கொள்ள...
(15884)
077 117 0544, 075 231 1544

காணி விற்பனைக்கு
மானிப்பாய் சுதுமலை அம்மன் கோவிலில் இருந்து 1/2 Km தூரத்தில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(C-6689)
077 589 0959
077 172 6596

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.
நேரடி வகுப்புக்கள்
தமிழ் மொழி மூலம்
2025 A/L
கணித, உயிரியல் பிரிவுகள்

PHYSICS
திரு. G. பிரபா
திரு. N. கபிலன்
திரு. R. ராகுலன்

CHEMISTRY
திரு. G. BENO
திரு. T. சுசாந்தன்
திரு. V.K நந்தா

BIOLOGY
திரு. V.S. குணசீலன்
திரு. K. இராகவன்

COM. MATHS
திரு. P. செந்தில்நாதன்
திரு. S. சிவகரன்

AGRICULTURE
திரு. K. அரசிளங்குமரன்

ICT
திரு. K. கேதீஸ்வரன்

ENGLISH MEDIUM

PHYSICS
MR. M. KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR. G. BENO

BIOLOGY
MR. V.S. GUNASEELAN

COM. MATHS
MR. P. SENTHILNATHAN
MR. S. SIVAKARAN

ஆரம்பம் - 10.06.2023 Saturday 8.00AM
நிகழ்நிலை வகுப்புகளும் நடைபெறும்.
சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 076 569 3006, 076 566 3006, 077 791 7611
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
https://facebook.com/NEW SCIENCE HALL JAFFNA
(C-6694)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.